

காஞ்சிபுரத்தில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர், எம்.எல்.ஏ. தலைமையில் 'கலையுலகில் கலைஞர்' என்ற தலைப்பில் அவரது புகழைப் போற்றி தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர் சிறப்புரையாற்றினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ., மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், காஞ்சிபுரம் மேயர் திருமதி.மகாலட்சுமி யுவராஜ், சண்பிராண்ட் ஆறுமுகம், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக்கொண்டனர்.

# கேரளாவில் கன மழைக்கு வாய்ப்பு!

## 5 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை!

திருவனந்தபுரம், ஜூன்.19-

கேரளாவில் 5 நாட்களுக்கு கன மழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. குறிப்பாக பத்தனம்திட்டா, கோட்டயம், ஆலப்புழா, இடுக்கி மற்றும் எர்ணாகுளம் மாவட்டங்களில் மழையின் வேகம் அதிகமாக இருக்கும் என கூறப்பட்டு ள்ளது. இதன் காரணமாக இந்த 5 மாவட்டங்களுக்கும் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்ப ட்டுள்ளது. தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் மிக கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்த மழையின் காரணமாக கேரளாவில் தற்போது சூறைக்காற்று வீசி வருகிறது. இதனால் சில இடங்களில் மரங்கள் முறிந்து உள்ளன. இதற்கிடையில் மழையின் காரணமாக கேரளா முழுவதும் பல்வேறு தொற்று நோய்கள் பரவி வருகின்றன. குறிப்பாக டெங்கு காய்ச்சல், எலிக்காய்ச்சல் மற்றும் வைரஸ் காய்ச்சல் போன்றவை காரணமாக பாதிக்கப்பட்ட பலரும் மருத்துவமனைக்கு வரத் தொடங்கி உள்ளனர்.

மாநிலத்தில் 1½ லட்சத்துக்கும் அதிகமானவர்களுக்கு காய்ச்சல் பாதிப்பு உள்ளதாக கூறப்படு கிறது. இதில் 877 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. எர்ணாகுளத்தில் நேற்று ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காய்ச்சலில் பாதிக்கப்பட்டதால், அரசு மற்றும் தனியார் ஆஸ்பத்திரிகளில் கூட்டம் அலைமோதுகிறது.

இதனை கருத்தில் கொண்டு மாநில சுகாதாரத் துறை நோய் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி உள்ளது.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதிக்குட்பட்ட நெமிலிச்சேரி ஊராட்சியில் 23.56 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலகத்தை நெமிலிச்சேரி ஊராட்சி மன்ற தலைவர் கு.தமிழ்ச்செல்வி முன்னிலையில் முன்னாள் அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. பயன்பாட்டிற்கு திறந்து வைத்து பார்வையிட்டார். இதில் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் டி.தேசிங்கு, மாவட்ட நிர்வாகிகள் நடுகுத்தகை ஜெ.ரமேஷ், ம.இராஜி, எஸ்.ஜெயபாலன், ஒன்றிய நகர செயலாளர்கள் ப.ச.கமலேஷ், தி.வை.இரவி, ஜி.நாராயண பிரசாத், ஒன்றிய குழு துணைத் தலைவர் பரமேஸ்வரி கந்தன், வட்டார அலுவலர்கள் ராம்குமார், காந்திமதிநாதன், ஒன்றிய கவுன்சிலர் கே.சுரேஷ்குமார், ஊராட்சி செயலர் ஏழுமலை, ஊராட்சி மன்ற துணை தலைவர் வாசுகி எட்வின், நிர்வாகிகள் இ.கந்தபாபு, எம்.குணசேகரன், பா.கந்தன், நடுகுத்தகை கே.சுரேஷ்குமார், ஜி.சி.சி.கருணாநிதி, ஆர்.செந்தாமரை, இ.வி.பி.பிரதீப், வார்டு உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# ஆளுநர் ரவியை அகற்றக்கோரி ம.தி.மு.க. கையெழுத்து இயக்கம்!

## தமிழ்நாடு முழுவதும் நாளை தொடங்குகிறது!

சென்னை, ஜூன்.19-

மறுமலர்ச்சி தி.மு.கழகத்தின் 29 ஆவது பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், தமிழ்நாடு ஆளுநர் பொறுப்பிலிருந்து ஆர்.என். ரவி அவர்களை அகற்றக் கோரும் கையெழுத்து இயக்கத்தை மறுமலர்ச்சி தி.மு.க. 20.06.2023 அன்று காலை 11 மணிக்கு தமிழ்நாடு முழுவதும் தொடங்கி நடத்துகிறது.

தலைநகர் சென்னையில், தலைமைக் கழகம் அமைந்துள்ள தாயகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் கழகப் பொதுச்செயலாளர்வைகோ அவர்கள் கலந்துகொண்டு கையெழுத்து இயக்கத்தைத் துவக்கி வைக்கிறார்.

கழக அவைத் தலைவர் ஆடிட்டர் ஆ.அர்ஜுனராஜ் கோவையிலும், கழகப் பொருளாளர் மு.செந்திலதிபன் கடலூரிலும், கழக முதன்மைச் செயலாளர் துரை வைகோ தென்சென்னையிலும், கழகத் துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்யா காஞ்சிபுரத்திலும், கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.கு.மணி விழுப்புரத்திலும், கழகத் துணைப் பொதுச்செயலாளர் தி.மு. இராசேந்திரன் திருநெல்வேலியி லும், கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆடுதுறை முருகன் குடந்தையிலும், கழகத் துணைப் பொதுச்செயலாளர் டாக்டர் ரொஹையா சேக்முகமது திருச்சியிலும் கையெழுத்து இயக்கத்தைத் துவக்கி வைக்கிறார்கள்.

கழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், மாவட்டக் கழக செயலாளர்கள் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி, மக்கள் இயக்கமாக நடத்துகிறார்கள்.

## மிகவும் பழமை வாய்ந்த இராயபுரம்

# ரயில்வே அச்சுக்கூடத்தை மூடும் திட்டத்தைக் கைவிடுக!

## ஒன்றிய ரயில்வே அமைச்சருக்கு கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, ஜூன் 19-

"இராயபுரம் இரயில்வே அச்சுக்கூடத்தை மூடும் முடிவைக் கைவிடுக" என வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:

தென்னக இரயில்வே ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வி. ஹரிலால்., இரயில்வே ஊழியர்களின் சார்பாக என்னிடம் வழங்கிய மனுவின் காரணத்தைத் தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

இரயில்வே போர்ட் சென்னை இராயபுரத்தில் உள்ள இரயில்வே அச்சுக்கூடம் உள்ளிட்ட 5 அச்சகங்களை மூடுவதற்கு முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். இராயபுரம் இர



யில்வே அச்சுக்கூடம் 1890 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட மிகவும் பழமையான அச்சுக்கூடம் என்றும், கால ஓட்டத்திற்கு ஏற்ப அது நவீன மயமாக்கப்பட்டு தற்போது டிடிபி(DTP) டெக்னாலஜி மூலம் அச்சுக் கோர்க்கும் திறன் பெற்றுள்ளது என்றும், மேலும் 2015 ஆம் ஆண்டு ரூபாய் 15 கோடி மதிப்பில் ஸ்பெயின் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரொட்டேடக் (ROTATEK) என்னும் இயந்திரத்தின் மூலம் சிறப்பாக இயங்கி வருகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த அச்சுக்கூடம், இரயில்வேக்கு தேவையான, பதிவு செய்யப்பட்ட இரயில்வே டிக்கெட்டுகள், பதிவு செய்யப்படாத பயணிகள் இரயில் டிக்கெட்டுகள் மற்றும் இரயில்வே கால அட்டவணைகள், இரயில்வே அலுவலக பயன்பாட்டுக்கு தேவையான நோட்டு புத்தகங்கள் முதலியவற்றை அச்சிட்டு வழங்கி வருகிறது. இந்நிலையில், இந்த அச்சுக்கூடம் மூடப்பட்டால், அதில் பயன்பாட்டில் உள்ள நவீனக் கருவிகளும், மற்ற உபகரணங்களும், பழைய சாமான்கள் போல மிகக் குறைந்த விலைக்கு விற்கப்பட வேண்டிய நிலை ஏற்படும். இரயில்வேயின் விலை மதிப்பு மிக்க சொத்துக்கள் இழக்க வேண்டி இருக்கும்.

அதுவன்றி, இந்த அச்சுக்கூடம் செய்துவரும், பணிகளைத் தனியார் நிறுவனங்கள் மூலம் செய்ய முனைந்தால், பல கோடி ரூபாய் அளவில் இரயில்வேயின் பணம் விரயமாகும். இந்த தனியாரிடமிருந்து இரயில்வே துறைக்கு தேவையான இரயில்வே டிக்கெட் முதலான பொருட்களை வாங்கும் போது, பல முறைகேடுகள் நடப்பதற்கும் வாய்ப்புகள் உண்டாகும். இந்த அச்சுக்கூடத்தில் பணியாற்றும் தொழில் திறன் பெற்ற தொழிலாளர்கள், வேறு சாதாரண பணியிடங்களில் பணியமர்த்தப்பட வேண்டிய நிலை ஏற்படும். எனவே, இக்காரணங்களால் இந்த அச்சுக்கூடத்தை மூடும் முடிவைக் கைவிடும்படி தங்களிடம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களை கடிதத்தில் கூறியுள்ளார்.

# கத்தாரில் - கலைஞர் நூற்றாண்டு விழா!

## திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி!

தோஹா,ஜூன்.19-

முக்கடல் சூழ வாழும் முதுபெரும் தமிழினத்தை முக்கால் நூற்றாண்டாய் தன் முத்தமிழால், முன்னெடுத்த திராவிடக் கொள்கையினால் பீடு நடை போட வைத்த திராவிடப் பிதாமகன், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க நாளான 03.06.2023 அன்று கத்தார் திமுக சார்பில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது.

கத்தார் திமுக நிர்வாகிகள் சௌகத் அலிகான், வாளாடி ராஜ்குமார், ரஞ்சித்குமார், யாழினி குமார், ஜி.எஸ்.ஆர்.சத்தியராஜ், மணிகண்டன், எஸ்.ஆர். செந்தில்குமார், அறந்தை செந்தில்குமார், ராஜேஷ் குமார், மனோ கௌதம், முத்துக்கிரு ஷ்ணன், சிபி சக்கரவர்த்தி, இந்திரஜித், நகுல், நிஷாந்த், மோகன் விக்னேஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில்

## ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி விருப்ப மனு பெறுதல்!

### மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு அமைச்சர் உதயநீதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் வாரியாக கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், விருப்ப மனு கீழ்கண்ட தேதியில் பெறப்படுகிறது.

| நாள் /நேரம் | இடம் |
|---|---|
| 21.06.2023 மாலை ] 4.00 மணி | நகர கழக அலுவலகம், மதுராந்தகம் |

எனவே, ஒன்றிய நகர பகுதி பேரூர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், பதவிக்கு விருப்பமுள்ளவர்கள் விருப்ப மனுவை பூர்த்தி செய்து வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**க.சுந்தர்** எம்.எல்.ஏ.

செயலாளர் - காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

## வரலாற்று நாயகர் தலைவர் கலைஞர் புகழ்பாட

# திருவாரூர் நோக்கி மீனவ மக்களே திரண்டு வாரீர்!

## கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, ஜூன்.19-

"வரலாற்று நாயகர் தலைவர் கலைஞர் புகழ்பாட திருவாரூர் நோக்கி மீனவ மக்களே திரண்டு வாரீர்" என்று கழக மீனவர் அணி செயலாளர் டாக்டர் அ.ஜோசப் ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவின் தொடர்ச்சியாக வருகிற 20-06-2023 செவ்வாய்கிழமை அன்று நடைபெறு கிற கலைஞர் கோட்டம், முத்துவேலர் நூலகம் திறப்பு விழா நிகழ்வில் மீனவ மக்கள் வெகுவாக கலந்து கொண்டு சிறப்பிக்க அன்புடன் அழைக்கிறேன்.

இருள் சூழ்ந்து கிடந்த கடற்கரை கிராமங்களுக்கு மின்சாரம் கொண்டுவந்தவர் தலைவர் கலைஞர். மீனவமக்களுக்கு ஒலைகுடிசைகளிலிருந்து கான்கிரீட் வீடுகள் அமைத்து தந்தவர் தலைவர் கலைஞர்.

சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பெயரால் மீனவ கிராமங்கள் தோறும் தொகுப்பு வீடுகள் அமைத்து பட்டா தந்தவர் தலைவர் கலைஞர். கடற்கரைக் கிராமங்களில் மீன்விற்பனை கூட்டங்கள் அமைத்து, அதில் மின்சார விளக்குகளையும் தந்தவர் தலைவர் கலைஞர்.

மீனவக் கிராமங்களிலிருந்து தொலைதூரம் நடந்து சென்று துயருற்ற மக்களுக்காக அனைத்து கிராமங்களுக்கும் அரசு பேருந்துகளை இயங்க ஆணை பிறப்பித்தவர் தலைவர் கலைஞர்.

மீனவ மக்களுக்கு எட்டாத தொலைவில் இருந்த கல்வியை கடற்கரை கிராமங்களுக்கே அரசு பள்ளிகளை கொண்டு வந்து ஏழை எளிய மீனவ மக்களின் வாழ்வில் அறிவு விளக்கை ஏற்றிய நிகரற்ற தலைவர்கலைஞர்.

மீன்பிடிபடகு விசை எந்திரங்களுக்கு டீசல் மானியம் தந்தவர் தலைவர் கலைஞர். மீனவர்களுக்கு மீன்பிடி தடைகால நிதி உதவித் தொகை திட்டம் தந்து மீனவர்களை பாதுகாத்தவர்தலைவர் கலைஞர்.

1969- முதல் தலைவர் கலைஞர் தலைமையில் கழக ஆட்சி அமைந்த காலங்களிலெல்லாம் மீனவர்களின் பொற்கால ஆட்சியாக, அவர்தம் வாழ்வில் ஒளியேற்றும் ஆட்சியாக திகழ்ந்தது அத்தகைய தலைவரின் நூற்றாண்டு நிகழ்வில் மீனவ மக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என அன்புடன் அழைக்கிறேன்.

தன் வாழ்நாளெல்லாம் மீனவ மக்களின் வாழ்வுக்காக உயர்வுக்காக வாழ்வாதாரத்திற்காக பல்வேறு திட்டங்களை தாயுள்ளத்தோடு வாரி வழங்கிய பாரிவள்ளல் தமிழினத்தின் தன்னிகரில்லா தலைவர் கலைஞர் அவர்களின் தமிழினத் தொண்டு எவராலும் ஈடு செய்ய முடியாதது. அப்படிப்பட்ட கலைஞர் பெருந்தகையின் புகழ் பாட திருவாரூர் நோக்கி திரண்டு வாரீர்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# 'அரசு ஆர்ட்ஸ்' சுந்தரேசன் ஆறாம் ஆண்டு நினைவு நாள்!

சென்னை, ஜூன். 19

'அரசு ஆர்ட்ஸ்' சுந்தரேசன் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் இன்று.

முரசொலி பொங்கல் மலர் மற்றும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் மலர்களை தன் கை வண்ணத்தால் அழகுற வடிவமைத்த வரும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மற்றும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் அன்பை பெற்றவருமான 'அரசு ஆர்ட்ஸ்' நிர்வாக இயக்குனர் 'அரசு ஆர்ட்ஸ்' சுந்தரேசன் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் இன்று (19.6.2023 திங்கட்கிழமை) நினைவேந்தல் நடைபெறுகிறது.



இந்நிகழ்ச்சி 'அரசு ஆர்ட்ஸ்' எண்.78, சீனிவாச பெருமாள் சன்னதி முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை 14, (புதுக்கல்லூரி பின்புறம்) எனும் முகவரியில் நடைபெறுகிறது.

## கே. கருணாகரன், எஸ். பாலாஜி, முன்னிலை! சி. மூர்த்தி தலைமை!

# மாதவரம் 17வது வட்டத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி விஸ்வநாத தாஸ் பிறந்தநாள் விழா!

## புழல் எம்.நாராயணன் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 19

சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி விஸ்வநாத தாஸ் அவர்களின் 137 -வது பிறந்த நாளை முன்னிட்டு, மாதவரம் 17வது வட்டத்தில் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி காலை உணவு வழங்கப்பட்டது.

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம் தியாகி விஸ்வநாத தாஸ் நகரில், சுதந்திர போராட்டத் தியாகியும் சுதந்திரப் போராட்டத்தை பொதுமக்களிடத்திலே கொண்டு சேர்க்க நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்திய தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் 137 வது பிறந்தநாள் விழா கோலகாலமாக கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின்திருவுருவப்படத்திற்கு, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் மலர் தூவி அஞ்சலி செலுத்தி வணங்கினார்.

தியாகி விஸ்வநாததாஸ் நகர் தலைவர் சி. மூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வட்டச் செயலாளர் கே. கருணாகரன் வட்ட துணைச் செயலாளர் சி .பாலாஜி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது

இந்த நிகழ்ச்சியில் விஸ்வநாததாஸ் நகர் நிர்வாகிகள் அண்ணாமலை, கலைமணி, சுரேஷ், ஏழுமலை ராஜ், பாலாஜி ,ஏகாம்பரம், சரவணன், நவீன், குமார், ஏழுமலை, வளர்மதி, தீபா, சுகந்தி, சரஸ்வதி, வனிதா, திருமணி, நவநீதம், சிவகாமி, தேவி உள்ளிட்ட நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டார்கள்.




முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சோழவரம் ஊராட்சி தி.மு.க. சார்பாக கலைஞர் ஆட்டோ ஓட்டுநர் சங்கம் பெயர் பலகையை மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் சென்னை வடகிழக்கு மாவட்ட கழகச் செயலாளருமான மாதவரம் எஸ். சுதர்சனம் திறந்து வைத்து சோழவரம் ஊராட்சி மன்றத்தில் பணிபுரியும் துப்புறவுப் பணியாளர்களுக்கு 5 கிலோ அரிசி மற்றும் காய்கறிகளை வழங்கினார். உடன் சோழவரம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் மீ.வே.கர்ணாகரன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், அணியின் நிர்வாகிகள். கிளைக் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மா.பா. சாரதி

### ஜூன் 19 (1976)



வடாற்காடு மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவராகவும் – மாவட்ட அவைத்தலைவராகவும் பணிபுரிந்தவர்.

வேலூர் நகர்மன்றத்தில் இருபது ஆண்டு காலமாக உறுப்பினராகவும், மூன்று முறை நகராட்சித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றியவர்.

தமிழக சட்டப்பேரவைக்கு இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பத்தாண்டு காலம் சட்டமன்றப் பணிகளை செவ்வனே ஆற்றி, தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி மக்களுக்காக பேரவையில் வாதாடி, குறைபாடுகளை நிவர்த்தி செய்தவர்.

"பெயரால், புகழால், வல்லமையால், செல்வாக்கால், உருவத்தால் யானையென அவர் இருந்தாலும், கழகத்தின் கட்டளையெனும் அங்குசத்துக்கு அடங்கியன்றோ பணி குவித்தார்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**